விலை ரூபா 1-25

ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 கார்த்திகை 3 ஸபர் 13 இதழ் 278
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 19-11-83

## "ஒரு நாடோ அல்லது ஸ்தாபனமோ இந்த அரசை கவிழ்க்க முடியாது"

### தொழிற்சங்க கூட்டத்தில் ஜனாதிபதி

(கொழும்பு)

''இந்த அரசாங்கத்தை ஒரு வெளிநாடோ அல்லது ஸ்தாபனமோ அல்லது தனிநபரோ கவிழ்க்கமுடியாது'' என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்றுத் தெரிவித்தார்.

ஜாதிக சேவகசங்கமயவின் பதினெட்டாவது மகாநாடு நேற்று ஸ்ரீகோதாவில் நடைபெற்றது. இம்மகாநாட்டில் உரையாற்றுகையில்தான் ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி தொடர்ந்து பேசுகையில்; ''மக்களின் வாக்குப் பெற்று இந்த அரசு பதவிக்கு வந்துள்ளது. ஜனநாயகமுறையில் நாட்டை ஆளுகிறது. நாட்டின் முக்கிய பிரச்னைகள் பெரும்பான்மை மக்களின் விருப்பத்துக்கிணங்க தீர்த்து வைக்கப்படும்'' என்று கூறி; தமது இந்திய விஜயத்தின் பின்னர் தீர்வுகாணப்படும் என்றும் நம்பிக்கைதெரிவித்தார்.

மேற்படிதொழிற்சங்கத்தின் தலைவர் அமைச்சர் சிறில்மத்யூ உரையாற்றுகையில் ''ஜூலை கலவரங்களுக்கு தமது சங்க உறுப்பினர்கள் தான்காரணம் என்று சிலர் கூறியுள்ளனர். இதனை முழுவதுமாக மறுக்கின்றேன்'' என்றார்.

# "பலம்வாய்ந்த நட்புநாட்டுடன் பாதுகாப்பு ஏற்பாடு வேண்டும்"

## பாராளுமன்றத்தில் 'எஸ். டி' கோரிக்கை

### "வடக்கு, கிழக்கு துறைமுகங்கள், ஆலயங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வரவேண்டும்"

(இ. கந்தசாமி)

''இலங்கையின் இறைமையையும், ஒற்றையாட்சி அமைப்பையும் பாதுகாத்துக் கொள்வதற்காக நவீன முறைகளில் நமது பாதுகாப்பு அமைப்புகளை அபிவிருத்திச் செய்து கொள்ளும் வகையில் ஒரு பலம்வாய்ந்த நட்பு நாட்டுடன் பாதுகாப்பு உடன்படிக்கையொன்று செய்து கொள்ள வேண்டிய காலகட்டம் உருவாகியுள்ளது'' என்று கம்பஹா எம். பி. திரு. எஸ்.டி. பண்டாரநாயக்க நேற்று பாராளுமன்றத்தில அரசாங்கத்தரப்பினருக்கு எடுத்துக் கூறினார்.

வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு திரு. பண்டாரநாயக்க உரை நிகழ்த்தினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

#### பழிவாங்கலை நிறுத்துவோம்

''தேசிய ஒற்றுமை இல்லையெனில் எந்தவித அபிவிருத்தியையும் உருவாக்க முடியாது. இந்தக் கடைசி நிமிடத்திலாவது நாம் எமது அரசியல் எதிரிகள் மீதாக நடத்தி வரும் பழிவாங்கல்களை நிறுத்த வேண்டும். 1980 ஜூலை வேலைநிறுத்தத்தில் வேலை இழந்தவர்களை திரும்ப வேலைக்கு எடுக்க வேண்டும். அரசியல் இடமாற்றங்களை நிறுத்தவேண்டும். வீடு இல்லாதவர்களுக்கு வீடும் காணி இல்லாதவர்களுக்கு காணியும் வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களும் கிடைக்க வேண்டும்.

''கட்சி அரசியல் கடந்த 35 ஆண்டு காலமாக வெஸ்ட் மின்ஸ்டர் அமைப்பில் நடத்தப்பட்டு வந்ததினால் இன்றைய அவல நிலைக்கு நாட்டை கொண்டுவந்துள்ளது.

#### ஒன்றுசேரவேண்டும்'

'பிரிவினைக்கு எதிராக நாம் எல்லோரும் ஒன்று சேரவேண்டும். நாட்டின் அபிவிருத்திக்கு இதுமுக்கியம். இல்லையெனில் பாராளுமன்றத்தில் அபிவிருத்திக்காக எடுக்கப்படும் எந்தவித முடிவும் பயனற்றதாகிவிடும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி பயணம்

(கொழும்பு)

புதுடில்லியில் இம்மாதம் 24-ம் திகதி தொடக்கம் டிசம்பர் முதலாம் திகதி வரைநடைபெறும் பொதுநலவமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பாரியார் சகிதம் வரும்திங்கட்கிழமைகாலை புதுடில்லி பயணமாகிறார்.

திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கட்டுநாயக்காவிமான நிலையத்தில் ஏயர் லங்கா விமானம் மூலம் புறம்படும் ஜனாதிபதியும் பாரியாரும் மகாநாட்டில் கலந்துவிட்டு டிசம்பர் முதலாம் திகதி நாடு திரும்புகிறார்கள். (சூ)

## பார்த்தசாரதி—கூட்டணி தொடர்ந்து பேச்சுக்கள்

புதுடில்லி, நவ. 17

இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும். இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் சிறப்புத் தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதிக்குமிடையிலான பேச்சுக்கள் நேற்றும், நேற்று முன் தினமும் புதுடில்லியில் தொடர்ந்து இடம் பெற்றன. நேற்று முன்தினம் சுமார் 5 மணிநேரம் இப்பேச்சுக்கள் நடந்தன.

இலங்கைத் த. வி. கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் அப்பேச்சுப் பற்றிக் கருத்து வெளியிடுகையில், இவற்றில் ஆராயப்பட்ட விடயங்கள் அந்தரங்கமாக இருக்க வேண்டியவை என்றதுடன், எதுவித முடிவுகளும் எடுக்கப்படவில்லையென்றார்.

தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்று நடந்த பேச்சுக்களில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தமக்கிடையே பேச்சுக்கள் நடத்

[8-ம் பக்கம் பார்க்க]

## வடபகுதி முகாம்களிலுள்ள 5800 அகதிகள் பழைய இடங்களுக்கு திரும்பவில்லை!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள முகாம்களில் தங்கியிருக்கும் 5,800 அகதிகளும் இன்னும் தங்கள் பழைய இடங்களுக்குத்திரும்பவில்லை.

யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலுமுள்ள 18 முகாம்களில் இவர்கள் தங்கியுள்ளனர்.

கிளிநொச்சி முகாம்களில் தங்கியுள்ளவர்களில் அரைவாசிப்பேர் நாடற்றவர்களாவர். இவர்கள் இந்தியா செல்வதற்கு விருப்பம்தெரிவித்துள்ளனர். (மா)

## 100 அகதிகள் குடும்பங்களுக்கு 100 வீடுகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

அக்கராயன் பாடசாலை முகாமில் தங்கியிருந்த 100 அகதிகள் குடும்பங்களுக்கு நேற்று அக்கராயனில் 100 வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோன் அகதிகள் வீட்டுத் திட்டத்தின்படி 200 வீடுகள் அமைக்க 20 லட்சம் ரூபா ஒதுக்கியிருந்தார்.

யாழ். மாவட்ட வீடமைப்பு அதிகார சபையினால் இவ்வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன

10 ஆயிரம் ரூபாப்படி 200 வீடுகளும் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 100 வீடுகளே கட்டி முடிக்கப்பட்டிருந்தன.

அக்கராயன் பாடசாலையில் எஞ்சியிருக்கும் 32 அகதிகள் குடும்பத்துக்கும் மீதியாக கட்டி முடிக்கப்படவுள்ள வீடு

(8ம் பக்கம் பார்க்க)

## 'சற்றர்டே றிவியூ' மனு தள்ளுபடி

(கொழும்பு)

'சற்றர்டேறிவியூ' பத்திரிகைக்கு சீல் வைத்ததை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் தள்ளுபடி செய்வதாகஏகமனதாக தீர்ப்பளித்தனர்.

இம்மனு விசாரணை உயர் நீதிமன்ற நீதியரசர்களான ஆர். எஸ். வனசுந்தர, பி. எஸ் சி. ரத்வத்த ஜே. எஸ். ஏ. ஸோசா, பரிந்தா ரணசிங்கா, எச். ரொட்றிக்கோ ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த மனுவை 'சற்றர்டே றிவியூ' பத்திரிகையை வெளியிடும் நியூ ஏரா பப்ளிகேஷன் நிறுவனத்தின் சார்பில் திரு. கே. விசுவலிங்கமும் மற்றும் ஆறுபேரும் தாக்கல் செய்திருந்தனர்.

[8-ம் பக்கம் பார்க்க]

## தபால், தந்தி. தொலைபேசி கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

டிசம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து உள்ளூர், வெளியூர் தபால். மற்றும் தந்தி தொலைபேசிக் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன.

உள்ளூர் தபால் கட்டணம் ஐம்பது சதத்திலிருந்து அறுபது சதமாக அதிகரிக்கப்படுகிறது. வெளிநாட்டு விமானத் தபால் கட்டணம் மூன்று ரூபா ஐம்பது சதத்திலிருந்து ஐந்து ரூபாவாக அதிகரிக்கப்படுகிறது. தபாலட்டைக் கட்டணத்தில் மாற்றம் எதுவும் இல்லை.

உள்ளூர் பதிவுத் தபால் கட்டணம் ரூ. 2-50லிருந்து நான்கு ரூபாவாகவும், தந்திக் கட்டணம் முதல் பத்து வார்த்தைகளுக்கும் 75 சதத்திலிருந்து ஒரு ரூபாவாகவும் அதிகரிக்கப்படுகிறது.

உள்ளூர்த் தொலைபேசிக் கட்டணம் (முதல் மூன்று நிமிடங்களுக்கு) எழுபது சதத்திலி

(8-ம் பக்கம் பார்க்க)

## "இனமோதலின் இறுதிக் கட்டமே ஆடிக்கலவரம்"

### பிரதிக் கல்வி அமைச்சர் கருத்து

(கொழும்பு)

''சிங்கள மக்கள் ஆரியர், ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு உருது ஹிந்தி, சமஸ்கிருதம் என்பன ஆரிய மொழிகள். தமிழ் திராவிடமொழியாகும். சிங்கள இனம் தனியான ஒரு இனம். அது தமிழுடன் ஒன்றுபடமுடியாது. ஆனால் ஒன்றுபடவேண்டியது மக்களேயாகும்'' என்று பிரதி உயர் கல்வி அமைச்சர் திரு. ஏ. எம். ஆர். பி. அத்தநாயக்கா பட்ஜட் மீதான விவாதத்தில் நேற்று கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும்கூறிய

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சமீபத்தில் இங்கிலாந்தில் இருந்து கொண்டுவரப்பட்ட Leyland Sherpa 240 Deluxe Diesel Delivery Van 1978ம் ஆண்டு மொடல். (கலனுக்கு 35 மைல் வேலை செய்யக் கூடியது) விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். தொடர்பு கொள்ளும் முகவரி: ஆ. சுந்தரலிங்கம், 85, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். ரெலிபோன் யாழ்ப்பாணம் 23760 அல்லது 24019. 9967

சுன்னாகம் லைபிரறி. A. G. ஒப்பிஸ்சுக்கு அருகாமையில் கிணற்றுடன் வீடுகட்டப்பட்ட நிலையில் 2பரப்புக்காணி விற்பனைக்குண்டு விபரங்கட்கு தியாகராசா சண்கோஸ் ஸ்ருடியோ, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். 9907

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரியம்மன் கோவிலுக்கருகாமையிலும், கீரிமலை K. K. S ரோட்டு சேதுகாவலம் பிள்ளை J. P. வீட்டுக்கருகாமையிலும் வீடுகட்டக் கூடிய இரண்டு காணித்துண்டுகள் உடனடியாக விற்பனைக்குண்டு. அளவெட்டி ஞானோதய வித்தியாசாலை S பத்மநாதன் ஆசிரியருடன் தொடர்புகொள்ளவும். 9908

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் சங்கத்தானையில் பாடசாலை, வைத்தியசாலை, சந்தை, தபாற்கந்தோர், புகையிரத நிலையம் சமீபமாகஉள்ள வீடு கட்டுவதற்கு உகந்த மின்சார வசதியுள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ச. கந்தசாமி, உபதபால் நிலையம், சங்கத்தானை எனும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 9938

சங்கானை கிழக்கு தொட்டிலடியில், யாழ்ப்பாண ரோட்டிலிருந்து 200 யார் தூரத்தில் 9 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கோ, தோட்டம் செய்வதற்கோ உகந்த நிலம். விபரங்களுக்கு: தில்லையம்பலம், யாழ். வீரசிங்க மண்டபம். 9945

நீம்சுகாதார தூபம். நுளம்பு, கொசு இலையான் இவற்றின் தொல்லைகளை நீக்க இயற்கை மூலிகைகளால் சுகாதார முறையில் தயாரிக்கப் பெற்றது. மில்க்வைற் தயாரிப்பு. 9969

இல: 372, பருத்தித்துறை வீதி, நல்லூர் மார்க்கட்டில் 330 சதுரஅடி பரப்புள்ளகடை விற்பனைக்குண்டு. விபரம் நேரில். 959

கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்துக்கு அருகாமையில் ஏழுபரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். த. முத்துலிங்கம், ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 10011

யாழ்ப்பாண மாநகரத்தில், கண்டி வீதிக்கு மிக அண்மையாக மூன்று பரப்புக் காணியிலுள்ள இரண்டாயிரம் சதுர அடி வீடும், இரண்டு அல்லது மூன்று பரப்பாகப் பிரித்து வீடு கட்டக்கூடிய காணிகளும் விற்பனைக்குள்ளன. தரகர்கள் வேண்டாம். தொடர்பு:- திருமதி மாணிக்கவாசகர் 857, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 9794

மொறிஸ் மைனர் EL கார் நல்லநிலையில் உள்ளது. விற்பனைக்குண்டு. அ. குலநாயகம், இந்துக்கல்லூரி வீதி, உரும்பிராய். (9951)

## விற்பனைக்கு

அராலி கிழக்கு 'கப்பனவரவை' வீடுகட்ட உகந்த காணி கிணற்றுடன்3பரப்பும், 'வீமசிட்டி' பனைவளவு 4 பரப்பும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு N. ராஜரட்ணம், 220, வீரணங்கல், வதிரி, கரவெட்டி. (9998)

VESPA ஸ்கூட்டர் P 150 X 9ஸ்ரீ 3434 நல்ல நிலையில் உள்ளது. சொர்ணலிங்கம், அன்னவில்லா, காங்கேசன்துறைவீதி, கொக்குவில். (9990)

டைப்பிஸ்ட் மேசை, கதிரை, Executive Table Conference Table, H. Iron Gurders விற்பனைக்கு உண்டு. Dr. N. உருத்திரசிங்கம், பொற்பதி வீதி, கோண்டாவில். (9983)

நல்ல நிலையில் உள்ள 9 ஸ்ரீ 589 Peogot 304 வாகனம் விற்பனைக்குஉண்டு. தொடர்பு: N. துஷ்யந்தன், 4, சோமசுந்தரம் அவென்யூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (9978)

யாழ். நகரில் ஆட்டுக்கல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுக்கல் முதலியன கிடைக்குமிடம் S. S. அபூபக்கர் அன் கோ., 112, கே.கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. (9916)

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைகுள் இரண்டு பரப்புக் காணியுடன் ஐந்து அறை வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 12' புது வீதி, யாழ்ப்பாணம். 10014

## கல்வி

ரேடியோ, T. V. தொழில் நுட்ப வகுப்புகள் ஆரம்பமாகின்றன. பயிற்சி முடிவில் அரச அங்கீகாரத்துடன், சர்வதேச முக்கியத்துவம்பெற்ற சான்றிதழைப் பெறுவதோடு இரண்டு அலைவரிசைகளைக் கொண்ட ஒரு வானொலிப் பெட்டிக்கும் சொந்தக்காரராகுங்கள். விபரங்கட்கு: J. E. C., 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 9953

## பயிற்சி

அரச அங்கீகாரத்துடன், சர்வதேச முக்கியத்துவம்வாய்ந்த சான்றிதழுக்குரிய ஒரு மாதகால வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிச வகுப்புகள் ஆரம்பமாகின்றன. J, E. C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 9954

## வகுப்புக்கள்

Piano வும், Accordian னும் சனி, ஞாயிறு உட்பட திருமதி தோமஸ், கதிரை மாதா கோவிலின் வாயிற்புற வீதி, சில்லாலை. (மகளிர் மட்டும்) 8914

## வாடகைக்கு

புதிய வீடியோ படங்கள் எமது இந்த வார வெளியீடு சரணாலயம், தியாகி, நீதி தேவன் மயக்கம், சூரக்கோட்டைசிங்கக்குட்டி அடுத்த வெளியீடு மண்வாசனை, அடுத்த வாரிசு, இமைகள். ''துர்க்காஸ்'' ஓடியோ - வீடியோ எக்ஸ்பெட்ஸ், 68, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். 9962

யாழ் நகர் பஸ் நிலையத்துக் கண்மையில் 3 கடைகள் சகல வசதிகளுடன் வாட...க்குண்டு முழு விபரங்களுக்கு விண்ணப்பிக்குமிடம்: பிராஜ்மல் என்ரப்பிறைசஸ், 93, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 9988

## தேவை

100 C. C.க் குட்பட்ட Recondition அல்லாத நல்ல நிலையிலுள்ள மோட்டர் சைக்கிள் (any brand) தேவை, சனி காலை 6-30—12 மணி வரை அல்லது திங்கள், செவ்வாய் காலை 6-30—9 மணி வரை சந்திக்கவும், க. யோகேஸ்வரன் 603, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். 10001

பிறசியர் மற்றும் தையல் வேலையில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. நேரில்: அங்கலின் காமன்ஸ், 24/1, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம். 9985

மணமகள் தேவை. யாழ்ப்பாண இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த பாங்கில் உத்தியோகம் பார்க்கும் 2000 ரூபா வரை சம்பளம் பெறும் 36 வயதுடைய 12-ல் செவ்வாயுள்ள மணமகனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த அழகிய உயரமுள்ள படிப்பும் குணமுமுள்ள மணமகள் தேவை. லண்டன் அமெரிக்கா செல்ல விரும்புபவர்கள் விரும்பத்தக்கது. சீதனம் எதிர்பார்க்கப் படும். ஜாதகக்குறிப்பு, படம் என்பனவற்றுடன் உடனடியாக கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:9960 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9960

பிளேற்றன் மெசின் மைண்டர், கொம்பசிற்றர், பைண்டர், மற்றும் மொனிற்ரேஸ் கொப்பி கட்டத் தெரிந்தவர்களும் பழக விருப்பமானவர்களும் தேவை. விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். தமயந்தி அச்சகம், மானிப்பாய். (9975)

மிக உன்னதமான நிலையிலுள்ள 404 கார் (73/74 Full Safari Model) தேவை. விலாசம், டெலிபோன் நம்பர், கார் நம்பர், நிறம், Extras விலை விபரங்களை அறிவிக்கவும். ஸ்ரீதரன், 'நடராஜ கோட்டம்', வல்வெட்டித்துறை. (9991)

மின் ஒட்டுதல் (Electric Welding) வேலைக்கு அனுபவமுடையவர்கள் உடனே தேவை. விஸ்வரத்தினம், 138, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடிச் சந்தி, யாழ்ப்பாணம். (9996)

பிடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர் இருபாலாரும் தேவை. நேரில் வரவும்: த. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ், 21, புதிய மக்கள் நவீன சந்தை, யாழ்ப்பாணம். (9997)

பாண்வேலை தெரிந்தவர் வாஸ் ஒருவரும், டெலிவரி செய்வதற்குச் சைக்கிள் ஓடத் தெரிந்த ஒருவரும் தேவை. உடன் நேரில் வரவும் நியூ பாரத் பேக்ஹவுஸ் பெற்ரோலியக் கூட்டுத்ஸ்தாபன அருகாமை 86 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9956

வசாவிளானிலுள்ள 100 பரப்பு தோட்டத்தை (மரக்கறி+பழம்) தங்கி யிருந்துநிர்வகிக்கவும். மேற்பார்வைசெய்யவும் கூடிய ஒருவர் தேவை, எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும் விளம்பரதாரர் 44A, Flower Road, Colombo-7. 9922

யாழ். நகரிலுள்ள நிறுவனமொன்றுக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. தோடம் பழ இனிப்பு, கட்போல்ஸ் போன்ற இனிப்புவகைகள் தயாரிப்பதில் அனுபவம்பெற்றவர்கள்- கற்பூரவில்லைகள் தயாரிப்பதில் அனுபவம்பெற்றவர்கள்- சில்லறை வியாபாரத்தில் பில்போடக் கூடிய அனுபவம் பெற்றவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு 26-11-83க்கு முன் விண்ணப்பிக்கவும், விண்ணப்பங்களைத் தனித்தனியாக அனுப்பிவைக்கவும். விளம்பர இல: 9963 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 9963

## தேவை

மணமகள் தேவை. உயர் குல இந்துமத, மத்திய கிழக்கில் வேலைசெய்யும், தீயபழக்கங்கள் இல்லாத, நற்குணமும் பண்பும், பொறுப்புகள் அற்றவருமான 36 வயதுடைய பொறியியல் பகுதியில் (Technician) வேலைசெய்பவருக்கு அதேகுலத்தைச் சேர்ந்த நிறமான, 28-33 வயதிற்குட்பட்ட, நற்குணமும், பண்பும் உள்ள மணமகள் தேவை 8:ல் சனியும், சந்திரனுக்கு 7 செவ்வாயும் உண்டு. முழு சாதக விபரத்துடன், கொடுபடும் சீதனம், குடும்ப வரலாற்றுடன் எழுதவும். விளம்பர இல. 9845 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 9845

வர்த்தக நிறுவனமொன்றிற்கு எஸ். லோன் பைப்பில் பிற்றிங்ஸ் (Bend, Socket) மற்றும் பொருட்கள் தொகையாக செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த தொழிலாளர் உடன் தேவை. கூடியசம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9937, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9937

எவ்வகை இனங்களாயினும் கிலோ 25/- ரூபாவுக்கு மேற்பட்ட பல விலைகளில் கோழிகளை நேரடியாக வந்துகொள்முதல்செய்யப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Phone 23131. (9952)

## குத்தகைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் 6000 கன்று (24 பரப்பு) தோட்டம் ஒற்றிக்கு உண்டு. திரு. சிவசம்பு, விசாலாட்சி வித்தியாசாலை ஒழுங்கை, மல்லாகம் என்பவருடன்தொடர்பு கொள்ளவும். 10004

## ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 65, பிரதான வீதி திரு. அ. ச. மகாதேவா அவர்களிடம் 1-10-80 முதல் 31-3-82 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 16-12-83 காலை 9 மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து என்னால் விற்கப்படும்.

வ. சி. மகாதேவன்
ஏல விற்பனவாளர்
வண்ணார்பண்ணை.
9995

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## அந்தியேட்டிக் கிரியை



மானிப்பாயைச் சேர்ந்த ஆறுமுகம் தம்பிநாதர் அவர்களின் இறுதிக் கிரியையில் (அகாலமரணம்) கலந்துகொண்டவர்க்கும், அநுதாபச்செய்திஅனுப்பியோருக்கும் எமது இதயம் கலந்த நன்றிகள். அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை 21-11-83 திங்கட்கிழமை காலை 'இராஜ காரியர் லேன்' இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக வேண்டும் மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள். 10006

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
இராசநாயகம்
நாகரத்தினம்

தோற்றம்: 23-3-1924
மறைவு: 19 11-1981

அன்புத் தெய்வமே நீர் எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டு இரண்டாகிவிட்டது. உமது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்புள்ள கணவன், சகோதரர், சகோதரி, மச்சாள்மார், மச்சான்மார், மருமக்கள், மற்றும் உறவினர்கள்.
சுதுமலை,
மானிப்பாய்.
9926

நாளை

## மகத்தான திறப்புவிழா

இரசிகப் பெருமக்களே!

எதிர்வரும் 20-11-83 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-09 தொடக்கம் 10-39 மணிவரை உள்ள சுபவேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்

## ஜவ்னா வீடியோ சென்ரர்
## JAFFNA VIDEO CENTRE

(ஞானம்ஸ் ஸ்ருடியோவிற்கு முன்பாக)

என்னும் ஸ்தாபனத்தை திறந்துவைத்து நடாத்த விருப்பதால், அன்பர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பர்கள் எமது நிலையத்தில் உடனடியாக அங்கத்தவராகலாம்.

இங்ஙனம்
உரிமையாளர்கள்
ஜவ்னா வீடியோ சென்ரர்
3, விக்டோரியா ரோட், யாழ்ப்பாணம். 10012

# "செல்வந்த, வறியநாடுகளை இணைக்கும் பாலமாக பிரிட்டன் இருக்கவேண்டும்!"

## மகாராணியாரின் விருந்துபசாரத்தில் இந்திய ஜனாதிபதி ஸெயில்சிங்

புதுடில்லி, நவ. 18

"பெரும் வரலாற்றுப் பாரம்பரியங்களுடன் கைத்தொழில் ரீதியில் சாதனைகள் பலவற்றைக் கொண்டுள்ள பிரிட்டன், மூன்றும் உலக வறிய நாடுகளையும், செல்வந்த நாடுகளையும் இணைக்கும் பாலமாக அமையவேண்டும்" என்று இந்திய ஜனாதிபதி திரு. ஜியானி ஸெயில்சிங் கூறினார்.

இந்தியா வந்துள்ள பிரிட்டிஷ் மகாராணியார் எலிஸபெத்தையும், அவரது கணவர் எடின்பரோ கோமகனையும் கௌரவித்து புதுடில்லியில் நேற்று விருந்துபசாரமொன்று நிகழ்ந்தது. அப்போதே திரு ஸெயில்சிங் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

'பிரிட்டன் உலக சமாதானத்துக்காக உழைக்க வேண்டும். மூன்றும் உலக வறிய நாடுகளின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஏதுவாகச் செல்வந்த நாடுகளை அவற்றுடன் அது இணைக்கவேண்டும்.

நியூயோர்க்கில் நடைபெற்ற 37-வது ஐ. நா. சபைக் கூட்டத் தொடரில் இந்தியப் பிரதமர் திருமதி காந்தி தெரிவித்த மூன்றும் உலகநாடுகள் பற்றிய பிரச்னைகளையும் பிரிட்டன் நன்கு ஆராயவேண்டும்" என்றார்.

மகாராணியார் எலிஸபெத் இப்பேச்சுக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:- "பிரிட்டிஷ், இந்திய மக்கள் இன, மத, கலாசார, மொழிரீதியில் வேறுபட்டுள்ளார்கள். ஆயினும் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்குமிடையே நீண்ட கால வரலாற்று ரீதியிலான உறவு பலமானது.

இந்தியா சுதந்திரத்துக்குப் (6-ம் பக்கம் பார்க்க)

## "இடம்பெயர்ந்த ஆசிரியரின் இக்கட்டான நிலை"

(திருகோணமலை)

"நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டது. எனவே இடம் பெயர்ந்துசென்ற தமிழ் ஆசிரியர்கள் தங்கள் பழைய இடங்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் அவசரகால நிலைமையை நீடிக்க வேண்டும் என்று பாராளுமன்றத்தில் தீர்மானம் எடுத்தபோது நாட்டின் நிலைமை வழமைக்குத் திரும்பவில்லை. எனவேதான் அவசரகாலச்சட்டத்தை நீக்க வேண்டியுள்ளது என்று அரசாங்கம் கூறியுள்ளது. இதில்அரசின் எந்தக் கூற்றை இடம்பெயர்ந்து சொந்தப்பகுதிக்கு வந்துள்ள தமிழர் ஆசிரியர்கள் நம்புவது?"

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரசாரச் செயலாளர் திரு. சி. தண்டாயுதபாணி மேற்கண்டவாறு கூறினார்.

ஜூலை வன்செயலினைத் தொடர்ந்து திருமலைக்கு இடம் பெயர்ந்து வந்த தமிழ்ஆசிரியர்களின் கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. தண்டாயுதபாணி இவ்வாறு கூறினார்.

கூட்டத்தின் ஆரம்பத்தில், ஜூலை வன்செயலில் உயிரிழந்த பாதிப்புற்றவர்களின் நினைவாக இரண்டுநிமிட மௌனஞ்சலி நிகழ்த்தப்பட்டது.

இக்கூட்டம் திருகோணமலை இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. (வெ)

அரியாலையில் ஏற்றப்பட்ட

## சட்டவிரோத மணலை ஆச்சிரமத்துக்கு வழங்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் சட்ட விரோதமாக ஏற்றப்பட்ட மணலை, ஆனைக்கோட்டையிலுள்ள ஆச்சிரமத்திற்கு வழங்குமாறு யாழ். நீதவான் எஸ். நாகராசா உத்தரவிட்டார்.

அரியாலையிலிருந்து சட்ட விரோதமாக 2 டிராக்டரில் மணல் ஏற்றியதாக வி. வைரவன், தா. தில்லைநாதன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகளுக்கு தலா 50 ரூபா அபராதம் விதித்த நீதிவான் மணலை ஆச்சிரமத்திற்கு வழங்குமாறு உத்தரவிட்டார். (க)

## நுளம்புத் தொல்லை

(வேலணை)

வேலணைப் பகுதியில் நுளம்புத் தொல்லை அதிகரித்து வருகின்றது. இதனால் இப்பகுதியில் மலேரியா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## பெய்ரூட்டில் பிரெஞ்சு விமானங்கள் தாக்குதல்

### 35 பேர் பலி!

பெய்ரூட், நவ. 18

லெபனானில் நேற்று பிரெஞ்சு போர் விமானங்கள் மலைப் பகுதிகளில் பலத்த தாக்குதலொன்றைத் தொடுத்தன. இதனால் 35 பேர் கொல்லப்பட்டனர். 60 பேர்வரை படுகாயமடைந்தனர். லெபனான் பொலிசார் இத்தகவலை வெளியிட்டனர்.

கடந்த மாதம் 60 பிரெஞ்சு வீரர்கள் கொல்லப்பட்டது உட்பட லெபனானிலிருக்கும் சமாதானப் படைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பதிலடியாகவே இந்தத் தாக்குதல் அமைந்ததென்று தெரிவிக்கப்பட்டது.

பாலஸ்தீன, சிரிய நிலைகளே இத்தாக்குதலால் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதற்குப் பதிலடி கொடுக்கப்பட்டது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை பெய்ரூட் வைத்தியசாலையில் காயம்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சிறுவர்கள், பெண்கள் உட்படப் பலர் அங்கவீனர்களாகவும், அகோரமான உருவ மாற்றத்திற்கும் உள்ளாகியுள்ளனர். பலர் அகதிகளாகவும் இருப்பிடங்களைவிட்டுச் சென்றுள்ளனர். [கி]

## கவாஸ்கரும், ரெனியும்

[கொழும்பு]

"முன்னாள் நிதியமைச்சர் கலாநிதி என். எம். பெரேரா இரவு ஒன்பதரை மணிவரை தமது பட்ஜட் உரையை ஒரு முறை நிகழ்த்தினார். அச்சாதனையை இன்று நான் முறியடிக்கலாம்" என்று நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் நேற்று முன்தினம் தமது பட்ஜட் உரையின் நடுவே கூறினார்.

நேற்று முன்தினம் பட்ஜட் உரை மாலை நான்கு மணியளவில் தேநீர் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டது. அப்போது சபாநாயகர் ஈ.எல். சேனநாயக்கா, "மேலும் எவ்வளவு நேரம் பட்ஜட் உரையை நிகழ்த்துவீர்கள்?" என்று திரு. ரொனி டி மெல்லைக் கேட்டார். அதற்குப் பதிலளிக்கையிலேயே திரு. ரொனி மேற்கண்டவாறு கூறினார்.

திரு ரொனி மேலும் நகைச்சுவையாக, "கிரிக்கெட்டில் சேர் பிராட்மனைவிட, சுனில் கவாஸ்கர் நீண்டநேரம் துடுப்படித்துச் சாதனை புரிந்தது போலவும் நான் எனது பட்ஜட் உரையில் நீண்ட நேர சாதனையை ஏற்படுத்தலாம்" என்றார். (கி)


## காணி விற்பனை

உடுவில், ஆலடிச் சந்தி, கமத்தொழிற் சேவை நிலையத்துக்கு எதிராக உள்ள வீடு, கட்டடம் அமைக்கக்கூடிய காணி 2 1/2 பரப்பு உடன் விற்பனைக்கு.

ஒரு மைல் சுற்றுவட்டத்துள் இராமநாதன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, மருதனாமடம் சந்தை ஆகியன அமைவதோடு தனியார், பொது போக்குவரத்து வசதிகளுள்ள பிரதான வீதியிலிருந்து 50 யார் தூரம். எவரும் தொடர்பு கொள்ளலாம்.

**தமிழர் நிதியம்**
140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
22437



# பவர்ஸ்
## வீட்டுத் தோட்ட உரவகைகள்




தேவையான விசேட உரத்தின் இலக்கத்தைக் குறிப்பிட்டுப் பெறுங்கள்.

இல. 1. தாவர A வர்க்கம்
இல. 2. தாவர B வர்க்கம்
இல. 3. பழ மரங்கள்
இல. 4. இச்சிலி மரங்கள்
இல. 5. வாழை, அன்னாசி
இல. 6. விசேட பப்பாசி
இல. 7. விசேட உருளைக்கிழங்கு
இல. 8. விசேட மிளகாய்
இல. 9. விசேட வெண்காயம்
இல. 10. மலர் – பொது
இல. 11. விசேட புற்றரை
இல. 12. ரோசா – செவ்வரத்தம்பூ
இல. 13. அந்தூரியம், பெக்கோனியா
இல. 14. மலர் – "விசேடம்"
இல. 15. விசேட வெற்றிலை
இல. 16. விசேட திராட்சை
இல. 17. விசேட ஸ்ரோபறி
இல. 18. தெங்கு, செவ்விளந்தென்னை விசேட உரம்

**ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்**
தபாற்பெட்டி இல. 11 கொழும்பு.

MASTERS ABC 2/83

### மணிவாக்கு

அழுக்கற்று அகன்றாரும் இல்லை;
அஃது இல்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.

— குறள்

# நமது நோக்கு

## அராஜகத்தின் முடிவு அவசரம்

இன்று மோசமடைந்திருக்கும் தமிழர் பிரச்னை ஒற்றை ஆட்சியிலேயே தீர்க்கப்பட வேண்டுமென்ற முடிவு அரசின் முடிவென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

சிங்கள மக்கள் இதனைத் தவிர வேறெதையும் ஆதரிக்கமாட்டார்களென்பது மற்றைய அரசியல் கட்சிகளின் நிலையெனலாம். எனவே தமிழ் மக்களின் பாதுகாப்பு மிகப் பெரிய விடயமாகிறது.

இதற்கு மேலாக, அரசியல் சித்தாந்த அடிப்படையில் இடதுசாரிக் கட்சிகள் பலமான மத்திய ஆட்சியை விரும்புகின்றன. தமிழ் பகுதிகளுக்கு சுயநிர்ணயம் வழங்கவேண்டுமென்பது அவற்றின் பொதுவான கொள்கை.

ஆடிக்கலவரம் ஏற்படுத்திய குழப்பங்களுக்கு அரசாங்கம் நிர்வாக அடிப்படையில் இன்னும் தீர்வு காணவில்லை. பாதிக்கப்பட்ட அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தனியார் துறை ஊழியர்கள் பலர் தென்னிலங்கை திரும்பத் தயங்குகின்றனர்கள்.

பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு யாழ்ப்பாணப் பாடசாலைகள் நியாயமான முறையில் இடங்கொடுத்திருக்கின்றன.

பல்கலைக்கழக மாணவர்களின் கதி என்ன? வருட முடிவில் தங்கள் பழைய இடங்களுக்குத் திரும்புங்கள் என்ற கட்டளையை அவர்கள் எவ்வாறு ஏற்க முடியும், கலவரம் தொடங்க முன்னரே, பேராதனையில் மறுதலித்த கொடுமைகளைத் தாங்கிவந்தவர், இன்று திரும்புவதானால் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா?

உயிருக்கு ஆபத்து என்ற அடிப்படை அச்சம் படிக்கும் சூழ்நிலைக்கு எவ்வாறு உதவும்.

சிங்கள மாணவர்களுக்கு இவ்வித அச்சம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டபோது அவர்கள் விரும்பியும் பெற முடியாத பல்கலைக்கழக அனுமதி பெற இந்தச் சந்தர்ப்பம் உதவியது.

அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முடிவும் அது போன்றதே. ஒரு வேறுபாடு: இவர்கள் அனைவருக்கும் தற்காலிகமாகவாவது தமிழ் மாவட்டங்களில் இடமளிப்பது சாத்தியம்.

அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்கள் தொகை மிக அதிகம். நாம் ஏற்கனவே கூறியதுபோல் இவர்களில் பெரும்பான்மையோர், - கணிசமான தொகை - ஓய்வூதியம் பெற அனுமதிக்கப் படவேண்டும்.

ஆனால் இவர்களின் பொதுப் பிரச்னை: தென்னிலங்கையில், குறிப்பாக கொழும்பு, கண்டி போன்ற நகரங்களில் பாதுகாப்பாக, மானத்துடன் வாழ்க்கை வசதியுடன் வாழ்தல் இன்று கடினம்.

வேலையில் தொடரவேண்டியவர்கள் தொடர விரும்புபவர்கள் அரசாங்கத்தின் அனுதாபம் பெற்றேயாக வேண்டும். எவ்வகையிலும் இவர்களுக்கு பாதுகாப்பான தமிழ் பிரதேசங்களில் இடமளிக்க வேண்டும்; தனியார்துறை ஊழியர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் தக்க தொழில் வசதிகள் ஏற்படுத்த அரசு கடமைப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் பாரியதிட்டமொன்று செயற்பட வேண்டியது அவசியம்,

நாட்டு நிலைமை சீராக நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும் அறிகுறி உண்டு. என்றும் ஒரு சுமுகமான தீர்வு பல நிலைகளிலும் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வருவதற்குகாலம் எடுக்குமென்பது தெளிவு.

எவ்விதத்திலும் கடந்த கலவரம் திரும்பவும் தலைதூக்காது, அச்சம் அகன்று நாடு தெளிவான நிலைக்கு வர இவ்வித தற்காலிகமான ஒழுங்குகள் வருட முடிவுக்குள் நிறைவேற்ற முடியாத காரியமல்ல.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு சில துறைகளில்— குறிப்பாக பொறியியலிலும் மருத்துவத்திலும் உடனடியாக நிவாரணம் வழங்குவது கடினமென்பதை நாம் உணர்கின்றோம்.

அதனை ஒரு தீர்க்க முடியாத தொல்லையென்று கருதி மாணவர்களை பலிக்கு நிர்ப்பந்திப்பது எவ்வகையிலும் ஏற்கப்படமாட்டாது.

இதனை ஒரு அரசியல் பிரச்னையாக்குவது, அரசுக்கோ பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கோ நியாயமாகாது. தமிழ் பிரதேசங்களில் இதற்கு மாற்று வழி காண, பிரச்னையின் வேகத்தைத் தணிக்க பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

இன்று யாழ்ப்பாணமே, எவ்வித பிரதிநிதித்துவ ஆட்சியுமின்றி, அரச அதிபரின், அவருடைய சகாக்களின் மதிநுட்ப நிர்வாகத்தில் நாம் குறிப்பிட்ட பெரும் பாரமான பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

புதுடில்லியில் நடைபெற இருக்கும் இந்திரா — ஜே. ஆர். சந்திப்பு ஒரு நல்ல சந்தர்ப்பம்; அங்கு உருவாகும் அரிய ஆலோசனைகள் இங்கு உரிய பலனளிக்க முடியும்.

இதற்கு உறுதியளிப்பது இங்குள்ள மக்களின் நல்லெண்ணம், நல்லுறவு; அது 'றெடிமேட்' பொருளல்ல; அது தயாராக காலம் எடுக்கும்: அந்த இடைவெளியில் பகைமை நீங்க, நட்பு அரும்ப, பல பிராயச்சித்தங்கள் அவசியம்; அவற்றுள் அவசரமானதே அரசு பரந்த நோக்குடன் நிறைவேற்ற வேண்டிய பாதிக்கப்பட்ட மக்களின் புனரமைப்புத் திட்டம்.

எதிர்மறையாகக் கூறுவதானால்: குறிப்பிட்ட தேதிக்கு எல்லோரும் தங்கள் பழைய இடங்களுக்குத் திரும்புங்கள் என்று சவால் விடுவது அர்த்தமற்றது.

---

★ ஒரு சந்திப்பு

# யாழ்ப்பாணத்தில் ஆரியரத்தின

சர்வோதய இயக்கத் தலைவர் டாக்டர் ஏ. ரி. ஆரியரத்தின டிசம்பர் மாத முதற் பகுதியில் சமாதானப் பாத யாத்திரை யொன்றை நடத்தவுள்ளார். ஆயிரம் மைல்கள் நீளமான இந்த யாத்திரையை தெற்கே கதிர்காமத்திலிருந்து வடக்கே பருத்தித்துறைவரை நடத்த அவர் திட்டமிட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் இப்பாத யாத்திரை பற்றிய முன்னேடி நடவடிக்கைகளை ஆராய்வதற்கென டாக்டர் ஆரியரத்தின யாழ்ப்பாணம் வந்திருந்தார். தெற்கிலிருந்து வந்துள்ள ஒரு பிரமுகர்- ஆட்சியாளர்கள், ஏனைய பிரதான முக்கியஸ்தர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர் என்ற ரீதியில் 'ஈழநாடு' சார்பில் அவரைச் சந்தித்தேன். இச்சந்திப்பு புங்குடுதீவிலுள்ள சர்வோதய இயக்க நிலையத்தில் இடம்பெற்றது.

### அறிக்கை தவறு

''கலவரத்தையடுத்து நீங்கள் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வெளியிட்ட அறிக்கையில், ''மூன்று சந்ததியாக என்னிடம் சிங்கள பௌத்த இரத்தம் ஓடுகிறது'' என்று கருத்து வெளியிட்டிருந்தீர்கள். இன வேறுபாடற்றவன் என்றுகூறிக் கொள்ளும் நீங்கள், அப்பத்திரிகைக் கூற்றின்மூலம் கருதியது யாது?'' என்று பேட்டியை ஆரம்பித்தேன்.

டாக்டர் ஆரியரத்தின:- ''அப்பத்திரிகையில் அப்படி வந்த செய்தி முழுக்க முழுக்கத் தவறானது. நான் எக்கட்டத்திலும் அப்படிக் கூறவில்லை. ''பௌத்த சிங்களவர் என்று கூறிக்கொள்பவர்கள் இப்படியான அட்டூழியங்களைத் தடுக்க முன்வரவேண்டும்'' என்றுமட்டுமே கலவரத்தின்போது கூறினேன். இதனையே அப்பத்திரிகை, ''என்னுள் பௌத்த ரத்தம் ஓடுகிறது'' என்று நான் கூறியதாகத் திரித்துக் கூறியது'' என்று விளக்கினார்.

பா. அனந்தகிருஷ்ணன்

''அப்போ நீங்கள் அச்செய்தியை மறுக்கிறீர்களா?'' என்றேன். ''ஆம், பூரணமாக மறுக்கிறேன்'' என்றார். ''அப்படியானால் ஏன் மறுப்பு அறிக்கை எதனையும் வெளியிடவில்லை?'' என்றேன். ''வெளியிட்டேன். ஆனால் அவர்கள் பிரசுரிக்கவில்லை. அத்துடன் இந்த விடயத்தை நான் பெரிதுபடுத்த விரும்பவில்லை'' என்றார்.

அவர் மேலும், ''நான் 17 வருடங்கள் உயிரியல் ஆசிரியனாக இருந்தவன். ஆகையால் இரத்தத்தில் வேறுபாடுண்டு என்று கூறுவதற்கு நான் பித்தனல்ல'' என்றார்.

''கலவரத்தை தொடர்ந்து தமிழ்த்தலைவர்கள் எவரையும் நீங்கள் சந்திக்கவில்லையா?''

நல்லூர் எம். பி திரு. எம். சிவசிதம்பரம், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோரைச் சந்தித்தேன். அவர்கள் மிகவும் குழம்பியிருந்தார்கள். என்னுடன் பேசவில்லை. என்னால் வெறும் அனுதாபத்தைமட்டுமே அவர்களிடம் கூறமுடிந்தது''என்றார்.

### பார்த்தசாரதியுடன் பேசினேன்

இந்திய சிறப்புத் தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதியின் சமாதான முயற்சிகள் பற்றி கூறுவீர்களா? என்று கேட்டேன்.

''அவரது முயற்சிகள் நிச்சயம் வெற்றியளிக்க வேண்டும். நான் அவரை இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனில் சந்தித்தேன். அவரே என்னை அழைத்திருந்தார்.

அவரிடம் நான் நடந்தவற்றைக்கூறினேன். அரசியல் ரீதியாக குழப்பத்தைகட்டவிழ்க்க முற்பட்ட விஷமச்சக்திகள் அம்முயற்சியில் தோற்றன என்று விளக்கினேன்.

திரு. பார்த்தசாரதி ஒரு சிறந்த ராஜதந்திரி. சிறிதே பேசினார். ஆனால் நீண்ட நேரம் எனதுபேச்சை செவிமடுத்தார்'' என்றார்.

டாக்டர் ஆரியரத்தின இதனையும் குறிப்பிட்டார். ''திரு பார்த்தசாரதியின் முயற்சிகள் வெற்றிபெறவேண்டும். ஆனால் அவர்எடுக்கும்சமாதானமுடிவுகள்உயர்மட்டத்தில்உள்ளவர்களுக்கு மட்டும் புரியக்கூடாது,

அம்முடிவுகள் தமிழ்,சிங்கள இனங்களின் அடிமட்டத்திலுள்ள உக்குபண்டா, ராமசாமி ஆகியோருக்கும் எட்ட வேண்டும்'' அப்போதே ஒரு பூரண சமாதானத்தை அடையலாம்'' என்றார்.

### பாதயாத்திரையின் நோக்கம்

டாக்டர் ஆரியரத்தின ''அடிமட்டத்திலுள்ள மக்களுக்கு சமாதானத்தின் மேன்மையை விளக்குவதே அவசியமானது ஆகையினாலேயே நான் டிசம்பரில் பெரும் பாதயாத்திரையை ஆரம்பிக்கிறேன்'' என்றார்.

''இப்பாதயாத்திரை குறித்து கருத்து மோதல்கள் எழவில்லையா?''

''எழுந்தன; ஆனால் அவற்றுக்கு நான் மசியவில்லை. ஜனாதிபதியும் என்னை அழைத்து பாதயாத்திரையை விஷமிகள் குழப்பக்கூடும்'' என்றார். ஆனால் நான் எதனையும் சமாதான நோக்கத்துக்காக சந்திக்க தயாராக இருப்பதாக அவரிடம் கூறினேன்'' என்றார்

### நீலன் ஆதரவு

''தமிழ்த் தலைவர்களுடன் இப்பாத யாத்திரைபற்றி நீங்கள் தொடர்புகொள்ளவில்லையா?''

''தொடர்புகொண்டேன். வட்டுக்கோட்டை உறுப்பினர் டாக்டர் நீலன் திருச்செல்வத்தையே என்னால் சந்திக்கமுடிந்தது. அவர் எனக்கு பூரண ஆதரவு தருவதாக உறுதியளித்தார்.''

உங்கள் பாத யாத்திரை நடவடிக்கைகள்பற்றிக் கூறுவீர்களா?''

''கதிர்காமத்திலிருந்து எதிர்வரும் டிசம்பர் 6ம் திகதி பாத யாத்திரையை ஆரம்பித்து சுமார் 100 பேர்வரை என்னுடன் கூடவே வருவார்கள். நாளொன்றுக்கு 15 மைல்கள் நடப்போம். பலர் ஊர்வலமாக வந்து எம்முடன் கலந்து கொள்வார்கள். பாதயாத்திரையின் இறுதிக் கட்டத்தில் ஒரு மாபெரும் சமாதானப் பேரணி வடக்கு நோக்கி நகரும் என்று நம்புகின்றேன்.''

### நாகரிகமானவர்கள்

''பாத யாத்திரையின்போது தெற்கில் சில விஷமிகளிடமிருந்து மட்டுமே பயமுறுத்தல் வரலாம் என்று கருதுகிறேன். ஆனால் வடபகுதி மக்கள் ஆதரவு தருவார்கள் என்று நம்புகின்றேன்'' என்றார்.

''நிச்சயம். உள்ளச் சுத்தியோடுஎடுக்கும்நடவடிக்கைகளை மட்டுமேஎமது மக்கள் ஏற்கத் தவறமாட்டார்கள். அவர்கள் நாகரிகமானவர்கள்; கல்விஅறிவுள்ளவர்கள்'' என்றேன்.

> ''அடிமட்டத்திலுள்ள மக்களுக்கு சமாதானத்தின் மகிமையை உணரவைப்பதே என் பாதயாத்திரையின் நோக்கம் ஜனாதிபதியும் என்னை அழைத்து விஷமிகள் குழப்பக் கூடும் என்று எச்சரித்தார்''

### பதவி விலகும்படி வற்புறுத்துவேன்

பாதயாத்திரையின் போது நீங்கள் ஏதாவது நிறைவேற்றவுள்ளீர்களா? என்று கேட்டேன். ''சிரமதானங்கள் இடம்பெறும். மக்களுடன் ஒன்று சேர்ந்து சமாதானத்தின் அவசியத்தை வலியுறுத்தவுள்ளேன்.''

பாதயாத்திரையின் முடிவில் மக்களிடம் கண்ட மாற்றங்கள், எனது முயற்சியின் பலாபலன்கள்பற்றி ஆட்சியாளர்களுக்கும் நாட்டுமக்களுக்கும் அறிவிப்பேன்.

எனது விளக்கங்களை ஆட்சியாளர்கள் உதாசீனம்செய்தால் இந்நாட்டுமக்கள் சார்பில் அவர்களை பதவியிலிருந்து இறங்கும்படி கேட்பேன்''என்றார்.

டாக்டர் ஆரியரத்தினவிடம் அவரது பாதயாத்திரைபற்றிய பேட்டியை முடித்துக்கொண்டு விடைபெற்றேன்.

---

## திருக்கார்த்திகை குமராலய தீபம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் நாளை திருக்கார்த்திகை அன்று காலை ஸ்நபனாபிஷேகமும், பூசையும் நடைபெறும். மாலை 5-00 மணிக்கு சந்தனக்காப்புச் சாத்தப்பட்டு நியாசபூர்வஷண்முகார்ச்சனையும், 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 6-30 மணிக்கு சொக்கப்பானையைத் தொடர்ந்து பெருமான் வள்ளி தேவசேனா சமேதராக வெளி வீதி வலம் வருவார்.

## சேதமடைந்த இந்து ஆலயங்கள்
# புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கலவரத்தின் போது சேதமடைந்த இந்து ஆலயங்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரேபியா தலைவர் அட்மிரல் பெரேராதம்மிடம் தெரிவித்ததாக உலக இந்துமகாசபைத்தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தெரிவித்தார்.

ஆலய புனரமைப்பு விடயம் தொடர்பாக இந்துமன்றங்களின் குழுஒன்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை இருமாதத்திற்குமுன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது. இக்குழு ரேபியா தலைவரையும் சந்தித்திருந்தது.

இக்குழுவில் உலக இந்து மகாசபைத் தலைவர் திரு. யோகேந்திராதுரைசுவாமி ஆகியோரை இந்துமாமன்றத்தின் சார்பில் திரு. எஸ். சிவசுப்பிரமணியம், சைவதமிழ் திருநெறிமன்ற தலைவர் திரு. குணநாயகம் சைவசித்தாந்ததேவாலய சார்பில் வண. சண்முகசுந்தரம், சைவபரிபாலனசபை சார்பில் திரு. எஸ். செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி காரியாலயம், இச்சந்திப்பின் விபரங்களை ரேபியாவிற்கு அனுப்பிநடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்ததாவும் இந்து ஆலயங்கள் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் திரு. யோகேந்திரா துரைசுவாமி தெரிவித்தார். (க)

## கயரோக தடுப்பு கொடித்தினம்

(கிளிநொச்சி)

தேசிய கயரோக தடுப்புசங்க கிளிநொச்சி கிளையினர் இம்மாதம் 21ம்திகதி முதல் 26ம் திகதி வரைகொடித்தின மொன்றினை கொண்டாட ஒழுங்கு செய்துள்ளனர்.

பிரஸ்தாபச் சங்கத்தலைவர் சட்டததரணி வி.ரி.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற கிளை. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்ககொடித்தினம் கொண்டாடப் படவுள்ளது.

இச்சங்கத்தினர் தொண்டர்களை கயரோக தடுப்பு பணியில் ஈடுபடுத்தவும் ஒழுங்கு செய்து வருவதுடன் இதுசம்பந்தமான ஆய்வொன்றினையும் மேற்க்கொள்ளவுள்ளனர்.

## பெருங்கதை உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை அரசடி ஸ்ரீ ஓங்கார விநாயகப் பெருமான் ஆலயத்தில் பெருங்கதை உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தொரு நாட்கள் நடைபெறும். தினமும் மாலையில் விசேட அபிஷேகமும் பூசையும் இடம் பெற்று அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி மாலை கஜமுக சம்மாரம் நிகழ்ந்து மறுநாள் பெருங்கதை பூர்த்தி பெறும்.

## பட்டம் பெற்றார்

(யாழ்ப்பாணம்)

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை கொழும்புப் பல்கலைக் கழகம் நடத்திய எம். பி.ல் (கல்வி முதுமானி) பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் மக்கள் கல்வி வளர்ச்சிக்கு (முறைசாரக் கல்வி) ஈழத்து இசைநாடகங்களின் பங்களிப்பு என்னும் இவரது ஆராய்ச்சிக் கட்டுரைக்கே எம். பில். பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

## இறந்த சகோதரன் கனவில் வந்து அழைப்பதாகக் கூறிய யுவதி தற்கொலை!

(மன்னார்)

ஏற்கனவே கிருமி நாசினி அருந்தி மரணமான சகோதரன் இரவில் கனவில் வந்து அழைப்பதாக கூறிவந்த இளம் யுவதிஒருவர்மரணமான சகோதரனிடம் செல்வதற்காககிருமி நாசினியை அருந்தி தற்கொலை செய்து கொண்டவர்.

மன்னார் பண்டிவிரிச்சான் கிராமத்தைச் சேர்ந்த 18வயது யுவதி ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டார்.

இம்மரணம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி ஜனாப் கபீபு முகம்மது தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## நோயாளியை விழுத்திய சிற்றூழியர்மீது நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்கள் தமது கடமையில் அசட்டை காட்டினால் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று உயர்பீடத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் சிற்றூழியர்ஒருவர் பெண்நோயாளிஒருவரைத் தள்ளுவண்டியில் வைத்துத் தள்ளுவண்டியை வேகமாகத் தள்ளிச் சென்றதால் தள்ளுவண்டி தடம்புரண்டு, பெண் நோயாளி விபத்துக்குள்ளானார்.

இதனையடுத்தே மன்னார் அரசினர் ஆதார வைத்திய சாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### குடியைவிடும்படி மனைவி வற்புறுத்தினார்
## மதுவை மறக்கமுடியாத கணவன் சாவை அணைத்தார்!

(மன்னார்)

தினமும் மதுபோதையில் வரும் கணவனைக் குடிக்கவேண்டாம் என்று மனைவி அடிக்கடி வற்புறுத்திவந்தார். ஆனால் மது அருந்தும் பழக்கத்தைக் கைவிடமுடியாதகணவன் நச்சு விதைகளைச் சாப்பிட்டு மரணமானார்.

தலைமன்னார் ஸ்ரேசன் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே நச்சு விதைகளைச் சாப்பிட்டு மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இம்மரணம் தொடர்பாக நடைபெற்ற விசாரணையின் போதுமரணமானவரின்மனைவி சாட்சியமளித்தார்.

மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி ஜனாப் எம் எம். எம் ஆலம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்

## மணமுடித்து எட்டு நாளில் இளைஞர் தற்கொலை!

(கரவெட்டி)

திருமணம் புரிந்த எட்டு நாட்களில் கணவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்த பரிதாப சம்பவம் அல்வாயில் நடந்துள்ளது.

அல்வாய்தெற்கைச் சேர்ந்த அழகேஸ்வரசாமி இரவீந்திரன் (27 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

உடுப்பிட்டிப்பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வீ. நடராசா மேற்கொண்ட இவரது மரண விசாரணையின் போது இறந்தவரின் தந்தையார், சகோதரன் மனைவி ஆகியோர் சாட்சியமளித்தனர்.

(8ம் பக்கம் பார்க்க

## ''பாதிக்கப்பட்ட தனியார் ஊழியருக்கு தொடர்ந்தும்உதவவேண்டும்!'

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட தனியார் துறை வர்த்தக ஊழியர்களுக்கு தொடர்ந்து உதவி வழங்க வேண்டும் என்று ம்சபந்தப்பட்ட அதிகாரிகளிடம் பாதிக்கப்பட்ட தனியார் வர்த்தக ஊழியர் நலன்புரிச் சங்கச் செயலாளர் திரு. து. கணேசலிங்கம் வலியுறுத்தி மகஜர் ஒன்றை கையளித்துள்ளார்.

அம்மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற கலவரத்தினால் நாட்டின் இதரபகுதிகளிலிருந்து வடக்கு நோக்கி வந்துள்ள 10,000 க்கும் மேற்பட்ட தனியார்துறை ஊழியர்கள் எந்த வித வருமானம் இன்றியும் வேலையின்றியும் கஷ்டப் படுகின்றனர். இவர்களுக்கு 4-ம் கட்ட உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டதே தவிர வேறு நிவாரண உதவிகள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை.

''அராசங்க கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளை தனியார் துறை ஊழியர்களுக்கும் வழங்குமாறு அத்தியாவசிய சேவை ஆணையாளர் நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோனுக்குத் தெரிவிக்கப்பட்டதற்கு பாதிக்கப்பட்ட தனியார்துறை ஊழியர்களின் விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பிவைக்கும்படி தொழில் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிட்டிருந்தார். அத்துடன் ஊழியர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்திருந்தார். மேலும் காலத்தைக் கழியாது அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் இவர்களுக்கும் வழங்க வேண்டும்'' என்றார். (மா)


HOTEL GNANAMS

யாழ். நகரில்

★ நவீன வசதிகள்
★ குளிரூட்டிய, குளிர்சாதனம் அற்ற அறைகள்
★ மேல்நாட்டு உள்நாட்டு உணவுகள்
★ விசாலமான மண்டப வசதிகள்

(திருமணவைபவம், விருந்துபசாரம், கலந்துரையாடல்)

● WEEK DAY:-
Executive Lunch Rs. 20/-
Take Away Packets Rs. 20/-
WEEK END:-
Buffet Lunch or Dinner Rs, 30/-

● அமைதியான சூழ்நிலை
இவையனைத்தையும் வழங்குவது

ஹோட்டல் ஞானம்ஸ்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22082



விவசாயிகளே! BAYER

உங்கள் நெல்வயல்களில்
காணப்படும்
சந்துக்குத்தி, கபிலநிற தண்டுத்தத்தி, இலைத்தத்தி
கொப்புழா, திரிப்ஸ் போன்றவற்றைக்
கட்டுப்படுத்துவதுடன்

நிலக்கடலை, காய்கறிவகைகள்,
உருளைக்கிழங்கு, புகையிலை
ஆகியவற்றைத் தாக்கும்
வேர்மணிப் புழுக்கள், வெட்டுப்புழுக்கள்,
துளைப்புழுக்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த
சிக்கனத்துடன் கூடிய அதி சிறந்த

குரேட்டர் 3% மணிகள்

பாவித்து அதிக பலன் பெறுங்கள்.


விலை: 500 கி.—18 ரூபா, 2 கி. கி.—65 ரூபா, 15 கி. கி.—475 ரூபா

உங்கள் தயாரிப்பாளர்கள்:-

ஹேகெம் லிமிட்டெட்,

400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10,

தொலைபேசி: 91181, 93138.



யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம்செய்த கனடிய சர்வதேச அபிவிருத்தி (சீடா) நிறுவனப் பிரதிநிதிகளான ஆசியப் பிராந்திய இயக்குநர் திரு. அன்ரனி புறூவர், செல்வி ஏ. சதர்லான் ஆகியோர் கொண்ட குழுவினர், பருத்தித் துறையில் அமைந்துள்ள பிரதேச அபிவிருத்தி அமைச்சின் திக்கம் பனம் பொருள் உற்பத்தி பல் தொழில் தொகுப்பிற்குச் சென்று பார்வையிடுவதையும், யாழ்ப் பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, திட்டமிடல் அமைச்சின் மேலதிகச் செயலாளர் டாக்டர் ஏ எஸ். குணசிங்கம், பனை அபி விருத்திச்சபைத் தலைவர் திரு. கே. நடராசா, கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதம்பிள்ளை ஆகியோர் இக்குழுவினருடன் அங்கு உரையாடு வதையும் இப்படத்தில் காண்க. (படம்: வண்-திரு. சி.பா.)

# இன்றைய பலன்

கார்த்திகை 3-ம் திகதி
சனிக்கிழமை
(19-11-83)

மேடம்: துன்பத்தின் ரேகை படரும் எதிலும் தயக்கம் ஏற்படும் ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக் கூடும் கடன்தொல்லை அதிகரிக்கலாம் நிதானம் வேண்டும்.

இடபம்: சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள் காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும் மகிழ்ச்சியான தினம்.

மிதுனம்: வாய்வுக்கோளாறினால் வேதனைப்படுவீர்கள் உணவு விடயத்தில் அதிக கவனம் வேண்டும் எதிரிகளின் கோழைத்தனமான நடவடிக்கையில் மாட்ட நேரிடும்.

கடகம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் குடும்பப் பிரச்னைகளில்சுமுகமான நிலை தென்படும் செல்வாக்குப் பெருகும் வாகன விருத்தியுண்டு.

சிங்கம்: அறவழியில் நாட்டம் பிறக்கும் தாராளசிந்தை மேலிடும் எதிர்பார்த்த சுப காரியத்திற்கு இன்று வழி கோலப்படலாம் நண்பர்களினால் நன்மை உண்டு.

கன்னி: உறவாடிக்கெடுப்பதற்கு பகைவர் காத்திருப்பார்கள் உற்சாகம் குன்றும் பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும் சிலருக்கு உஷ்ண ரோகம்ஏற்படலாம்.

துலாம்: காதல் விவகாரங்கள் தலைதூக்கும் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும் களஸ்திரவழியால் பொருள் வரவுக்கும் இடமுண்டு பெரியவர் ஆதரவுண்டு.

விருச்சிகம்: செய்யும் தொழிலில் சிரமங்கள் தோன்றும் நண்பர் ஒருவர் உமது காலை வாரிவிடுவதற்கு முனையக் கூடும் அவசர புத்தியினால் விபரீதங்கள் விளையும்.

தனு: தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும் புண்ணிய ஸ்தலயாத்திரையொன்று மேற்கொள்ளப்படலாம் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் தென்படும்.

மகரம்: வாழ்க்கை இன்று மல்லிகைத் தோட்டம் போல் மணம் பரப்பிக் கொண்டிருக்கும் காதல் சிட்டுக்களுக்கு இன்று கவர்ச்சிகரமான தினம் பலரின் ஆசிகளும் உண்டு.

கும்பம்: வணிகர்களாயின் வியாபார விருத்திஉண்டு புதிய முயற்சிகள் இன்று கைகூடும் செலவுகள் கைக்கு அடங்கியதாக இருக்கும் அதிக லாபம் உண்டு.

மீனம்: உறவு முறையில் வெடிப்பு ஏற்படும் நண்பர்களின் பிரிவு வேதனையைத் தரலாம் எதற்கும் நிதான புத்தியுடன் நடந்து கொள்ள வேண்டும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## கருத்தரங்கு

(கரவெட்டி)

"1984-ம் ஆண்டில் பாடசாலை மட்ட அமுலாக்கத் திட்டம்" என்பது குறித்துவிளக்கமளிக்கும் கருத்தரங்கு கோப்பாய் கல்வி வட்டார அதிபர்களுக்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு இம்மாதம் 25ம் திகதி அச்சுவேலி புனித. திரேசா மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். கோப்பாய் வட்டாரக் கல்விஅதிகாரி திரு. ஆ.வ. தங்கராசா தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. மா. சிமியாம்பிள்ளை உட்பட கல்விஅதிகாரிகள் குழுவினர் விளக்கமளிப்பார்கள்.

## செல்வந்த...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் அடைந்துள்ள வளர்ச்சி மிகவும் சிறப்பானது. அதன் வளர்ச்சி மேலும் உயரவேண்டும். பிரிட்டன் அதன் சமாதான நடவடிக்கைகளில் ஒத்துழைக்கும்" என்றார்.

மகாராணியாருக்கு அளிக்கப்பட்ட இவ்விருந்துபசாரத்தில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி உட்படப் பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

[கி]

# ரூ. 40,000 மோசடி வழக்கில் சந்தேகநபர் பிணையில்!

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் வேலைபெற்றுதருவதாக கூறி 40,000 ரூபா வாங்கி மோசடி செய்ததாக செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபர் 5000 ரூபா ரொக்கப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

யாழ். நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் சந்தேக நபரான திருமதி. அலன்ரெக்ஸி தர்மலிங்கம் ஆஜர் செய்யப்பட்டார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சி. டனிஸ், ஆனைக்கோட்டையைச்சேர்ந்த யோ, யோகராசா, இளவாலையைச்சேர்ந்த அ. அருள்தாஸ் ஆகியோர் பொலிசில் செய்துகொண்ட புகாரைதொடர்ந்தே சந்தேக நபரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி தர்மலிங்கம் ஆஜர்செய்யப்பட்டார்.

இப்பணம் கல்கிசையில் வைத்துக்கொடுக்கப்பட்டதால் இவ்வழக்கை கல்கிசை நீதிமன்றத்திற்கு மாற்றுவதாகவும், கட்டளை வரும்போது அந்நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதவான் தெரிவித்தார். (க)

## அன்பளிப்பு

(கரவெட்டி)

கட்டைவேலி உடுப்பிட்டி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தினர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பெண்கள்பிரிவு பாடசாலைக்கு சுவர்க் கடிகாரம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

சங்கத்தின் சார்பில் சங்கத் தலைவர் திரு செ. தங்கராஜா முகாமையாளர் திரு பொ. சத்தியமூர்த்தி ஆகியோர் இதனை பாடசாலை அதிபர் திரு கே.ராஜரத்தினத்திடம் கையளித்தனர்.

# ரூபவாஹினியில் இன்று

மாலை
6-00 நாளைய நிகழ்ச்சிகள்
6-02 'ஓன் வீகோ (ஆங்கிலக் கல்வி நிகழ்ச்சி)
6-15 விளையாட்டுப் பயிற்சி
6-30 பௌத்த சமய பேச்சு (சிங்களம்)
6-50 பௌத்த சமய பேச்சு (தமிழ்)
7-00 செய்திகள் (தமிழ்)
7-14 நாளைய நிகழ்ச்சிகள்
7-30 பௌத்த சமய பேச்சு (ஆங்கிலம்)
7-45 நகைச்சுவை நிகழ்ச்சி (சிங்களம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-30 நாடக நிகழ்ச்சி (சிங்களம்)
9-00 பௌத்தமதப் பேச்சு (சிங்களம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 உலக மெய்வல்லுநர்ப் போட்டிகள்

வடமராட்சியில் — முதன்முதலாக
ASTAN INSTITUTE - Jaffna
IN COLLABORATION WITH
SCIENCE CENTRE
(POINT PEDRO)
விசேட ஆங்கில வகுப்புகள்
இருநிலையில்
INTEGRATED ENGLISH
COURSE
LOWER AND HIGHER LEVEL
ஆரம்பம் 2-12-83
இரு முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை
திரு. T N. பஞ்சாட்சரம் — திரு. K. சபாநாயகம்
பாடத்தொகுதி:- 1. ஆங்கில உரையாடல் பயிற்சி
2. இலக்கணமும் பாவனையும்
3. சொல்லியல் விருத்தி
4. வாசிக்க எழுதப் பயிற்சி
விபரங்களுக்கு: நேரில் / தபாலில்
ASTAN
C/o SCIENCE CENTRE
Ponnuchamy Koddam Point Pedro
Head Office: ASTAN INSTITUTE
166/1, Hospital Road, Jaffna.

நாளை

# யோக சுவாமிகள் தொழிற்பயிற்சி பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையிலுள்ள சிவயோகசுவாமிகள் ஆசிரமத்தின் பிரிவாக இயங்கும் தொழில் பயிற்சி பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், பழைய மாணவர்களும் வருடாந்த தொழில் பொருட்காட்சியையும், செய்முறைப் பயிற்சிகளையும் நாளை காலை 9 மணி முதல் 12 மணிவரை நடாத்தவுள்ளனர்: மாணவர்களின் பல்சுவை நிகழ்ச்சிகளுடன் தேர்ச்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் நடைபெறும். வாரஇறுதி நாட்களில் இலவசமாக நடாத்தப்படும் தொழிற்பயிற்சி வகுப்புகளில் புதிய மாணவர்களும் சேர்ந்து கொள்ளலாம் என்று யோக சுவாமிகள் மகளிர் மன்றத் தலைவி திருமதி ரத்ன நவரத்தினம் தெரிவித்தார்.



பிரயாணச் சீட்டுக்களை
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

மீண்டும்! தொலைக்காட்சியில் சென்னை நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கண்டுகளிக்க உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துக்கொள்ளவும், மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக்கொள்ளவும்
நாடவேண்டியது
வீனஸ் 226/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
நியூ வீனஸ் 79/1, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-30, 6-30
நாகேஷ் - விஜயலலிதா
**தேன் கிண்ணம்**

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-[illegible]
**விடியும்வரை காத்திரு**

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
கமல் - ரஜனி - ஜெமினி
ஸ்ரீபிரியா - ஜெயதிபார
**அலாவுதீனும் அற்புத விளக்கும்**
(கலர் - புதிய பிரதி)
விரைவில்!
**ஆனந்த ராகம்**

**சாந்தி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
**ஊரும் உறவும்**
(கலர்)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
If I have seen it;
you better see it.
This is the film not
to be missed.
**36th Chamber of Shaoline**
தினசரி 4 காட்சிகள்

போயா
தினத்தையொட்டி
இன்று சினிமாக்
காட்சிகள் இல்லை

**ராஜா** (யாழ் நகர்)
தினசரி
10-30, 2-30, 6-00, 9-30
ராஜீவ் - ஜோதி ஸ்ரீ நாத்
**ரயில் பயணங்களில்**
20-11-83 முதல்
THE FIGHTERS
(Color-Karate film)

**Regal** Jaffna
Daily 10-30 a. m. 2-30
4-45, 7-00 only
CHARLES BRONSON..
**TELEFON**
From 22nd
**Island**
வெகுவிரைவில்
பயணங்கள்
முடிவதில்லை

**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
மாதவி, கருவிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
திறம்பட நடித்த
வர்ணப்படம்
**சத்திய சுந்தரம்**


## 31-ம் நாள் நினைவுதினம்

சட்டத்தரணி தம்பிப்பிள்ளை சோமசுந்தரம்



தோற்றம்:
28-12-1913

மறைவு:
22-10-1983

எம்மருமைத் தந்தையாரும் / மாமனருமாகிய சட்டத்தரணி தம்பிப்பிள்ளை சோமசுந்தரம் அவர்கள் இறைவனடி சேர்ந்ததை முன்னிட்டு நேரில் வருகைதந்தும், மலர் வளையங்கள் / அனுதாபச்செய்திகள் அனுப்பியும், எம் துக்கத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

அன்னாரது அந்தியேட்டிக்கிரியைகள் 21-11-83 திங்கட்கிழமை அதிகாலை கீரிமலையிலும் தொடர்ந்து காலை 8 மணி தொடக்கம் சபீண்டிகரணம், மாகேசுவர பூஜை ஆகியன அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சோ. சிவசுந்தரம், சோ. ஞானசுந்தரம்
சோ. யோகசுந்தரம்,
திருமதி வசந்தி சிவசுந்தரம்,
திருமதி சுதர்சினி ஞானசுந்தரம்

65 (79), அரசடி வீதி, யாழ்ப்பாணம். (10003)


## அச்சுயந்திரம் விற்பனைக்கு

"BREMNER" — Double Royal - சிலிண்டர் அச்சு யந்திரம் விற்பனைக்குண்டு. சுவரொட்டிகள். அச்சிடவும் மற்றும் தேவைகளுக்கும் பயன்படுத்தக் கூடியது.

தொடர்பு:
பொதுமுகாமையாளர்,
ஈழநாடு, யாழ்ப்பாணம்.

9992


## இவரைக் காணவில்லை

கந்தசாமி இலங்கேஸ்வரன் என்பவரை சில மாதமாக யாழ்ப்பாணத்தில் வைத்துக் காணவில்லை. இவரை இளங்கோ எனவும் அழைப்பதுண்டு. இவரின் சொந்த ஊர் ஏழுவூர் சுமார் 12 வயதிருக்கும். பொது நிறமுடையவர். கடைசியாக கால்சட்டையும், சேட்டும் அணிந்திருந்தார். இவரைப்பற்றி சரியான தகவலோ அல்லது இவரை நேரில் கூட்டிவருபவர்களுக்கோ 500/- மேற்பட்ட சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி;
கணேசமூர்த்தி, கிருஷ்ணசாமி அன் சன்ஸ்
55, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 10010

## Wanted - Clerk

A hospital in Valligamam West division requires the services of a clerk. Should be able to handle correspondence independently. Knowledge of accounts and typing essential.

Canvassing in any form is a disqualification.
Apply on or before 25-11-83.
Advt. No. 9958, - C/o, Eelanadu.
Jaffna.

9958

## NORTHERN REGION TRANSPORT BOARD

REGISTRATION OF LOCAL SUPPLIERS AND CONTRACTORS FOR 1984

Applications are invited from Suppliers, Manufacturers, Distributors, Contractors and Business Organisations who wish to register themselves for the supply of undermentioned goods and services during the year 1984 to the N. R. T. B.

1. Stationery Items.
2. Office Equipment and furniture.
3. Hardware Items
4. Paints.
5. Spare Parts for Motor Vehicles.
6. Tyres and Tubes.
7. Batteries.
8. Spring Blades.
9. Auto Electrical Goods.
10. Small Tools.
11. Uniform materials.
12. Rain coats, brief cases, shoes and leather products.
13. Fire Fighting Equipments.
14. Paper rolls for ticket machines and Calculating machines.
15. Date stamps and Rubber stamps.
16. Brooms, Ekel brooms, Brushes and Carpets.
17. Cotton waste and Banion waste.
18. Household Electrical Goods.
19. Torches and Batteries.
20. Coconut shell charcoal.
21. Soap disinfectants, soft soap and welfare equipment.
22. Timber and Planks.
23. Building Materials.

II. SERVICES :

1. Printing.
2. Repairs to typewriters and calculators.
3. Repairs to Electrical Equipments.
4. Repairs to fire fighting equipments.
5. Repairs to furniture.
6. Tailoring of Uniforms.
7. Civil Engineering Works.
8. Purchase of waste paper.
9. Civil Electrical Engineering Works.

All applications should be sent under registered cover to the Chairman, Tender Board of the N.R.T.B. to reach him on or before the 15th December, 1983.

The suppliers and contractors who are already registered should forward fresh applications.

If registration is sought for more than one item, a seperate application should be forwarded to each item. All such applications may be sent in one envelope marked "Registration of Suppliers—1984".

CHAIRMAN
Tender Board
Northern Region Transport Board

165, 4th Cross Street,
JAFFNA.

9824


## இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது

டிரான்ஸ்லங்கா மார்க்கெற்றிங் லிமிட்டெட்
(விசேட விற்பனைப்பிரிவு)

குறைந்த விலையில் சிறந்த தயாரிப்புகள்

நவீன புதிய டிசைன்களில் சகலருக்கும் ஏற்ற

- ✯ காற்சட்டைகள் (TROUSERS)
  (ஜில் – டெனிம் – கொட்றேய்)
- ✯ சேட் வகைகள் (SHIRTS)
- ✯ லேடீஸ் ஜீன்ஸ் (JEANS)
- ✯ ஸ்கேட்ஸ் (SKIRTS)
- ✯ பிளவுஸ்கள் (BLOUSES) மற்றும் பல

(விலை ரூபா 90-00 முதல் ரூபா 275-00 வரை)

மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

**கிறிஸ்துமஸ் விசேட சலுகை 5% கழிவு**

**டிரான்ஸ்லங்கா மார்க்கெற்றிங் லிமிட்.**

இல. 1, புதிய நவீன சந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
போன்: 23027

# வடக்கில் 10 லட்சம் வீடுகள்: திட்டம்தொடர்ந்துசெயல்படும்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தகவல்

(கொழும்பு)

''வடபகுதியில் 10 லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டம் அங்குள்ள அரசாங்க அதிகாரிகளின் உதவியுடன் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்''

இவ்வாறு உள்ளூராட்சி ஆணையாளர் திரு. கே. எம். அபயசிங்கா பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற உதவி அரசாங்க அதிபர்களின் மகாநாட்டில் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவா இது தொடர்பாகக் கேட்டகேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

வடபகுதியில் கிராமோதய சபைத் தலைவர்கள் அரசியலமைப்பின் 6வது திருத்தத்திற்கமைய சத்தியப்பிரமாணம் எடுக்காததால் தமது பதவியை இழந்துள்ளனர் என்றும், இதனால் 10 லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தை அமுல்படுத்துவதிலுள்ள கஷ்டங்கள் பற்றியும் திரு. மகாதேவா இந்தமாநாட்டில் எடுத்துக்கூறினார்.

வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவாவுக்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோன் இம் மகாநாட்டில் வைத்து பாராட்டுத் தெரிவித்தார். (இ-வெ)

---

(யாழ்ப்பாணம்)

சென். பற்றிக்ஸ். கல்லூரி தேவாலயத்தில் மரித்த பழைய மாணவர்களது ஆன்ம இளைப்பாற்றுதலுக்காக துக்கப் பாடற்பூசை இன்று மாலை 5 மணியளவில் இடம்பெறும். இப்பூசையின் முடிவில் பழைய மாணவர் சங்க மண்டபத்தில் தேநீர் விருந்து நடைபெறும். (வி)

---

## இனமோத..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாவது:''மக்களைக்கொன்றோ' சொத்துக்களை அழித்தோ பிரச்னைகளைத்தீர்க்கமுடியாது. நாய், கோழி, எறும்பு என்பன போன்று நாமும் அமைதியையே விரும்புகின்றோம். மக்களுக்கு நன்மை தரக்கூடிய ஆயுதமான அமைதியை நாம் தேடிக்கொள்ளவேண்டும். இனவாதத்தினால் ஒரு சிலர் மட்டுமல்ல இந்த நாடே அறிந்துவிடும்.

''எல்லாளன் - துட்டகைமுனு போரின் பின்னர் தான் இந்த நாட்டில் மோதல்கள் ஏற்பட்டன. அதற்கு முதல் இந்த நாட்டில் தமிழர்கள் இருக்கவில்லை.''

றெனி;- ''சேனக, குத்திக ஆகிய தமிழர்கள் இருந்தார்களே''

அத்தநாயக்கா: ''அவர்கள் வியாபாரத்துக்கு இங்கு வந்தவர்கள். அவர்களை வைத்துக்கொண்டு தமிழர்கள் இங்கு இருந்தார்கள் என்று கூறமுடியாது. இதற்கு முன் புராண காலத்தில் இயக்கர், நாகர், இராட்சதர் போன்ற இனங்கள் காணப்பட்டன. இவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலைத் தடுக்கவே புத்தபிரான் இங்கு வந்தார். இராம - இராவண யுத்தம்கூட இதுபோன்ற ஒரு இன மோதலாகும். எனவே புராண காலத்திலகூட இங்கு இன மோதல்கள் காணப்பட்டன. ஆனால் நாம் இன்று இனமோதலின் இறுதிக்கட்டத்தில் வாழ்கின்றோம்இந்த இறுதிக்கட்டத்தின் விளைவே ஆடிக்கலவரங்களாகும்'' என்றார். (சூ-இ)

---

## பார்த்தசாரதி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திய பின்னர் இந்திராவின் சிறப்பு பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதியுடன் மீண்டும் பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து நடத்தினர். இப்பேச்சுக்களில் இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து பல தரப்பட்ட விடயங்கள் பற்றியும் பேசப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் பேச்சுக்களின் விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை. (கி-சூ)

---

# தொழில் தகராறு: இளைஞர் கோர மரணம்

(கரவெட்டி)

தொழில் தகராறு காரணமாக இளைஞரொருவர் நெல்லியடியில் வைத்து கடந்த புதன் கிழமை கோஷ்டியொன்றினால் கோரமான முறையில் தாக்கப்பட்டு மரணமானார்.

கரவெட்டியைச்சேர்ந்த இளையதம்பி யோகராசா [27 வயது) என்ற இளைஞரே இவ்வாறு மரணமானவராவர்.

இவர் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை இது தொடர்பான ஸ்தல விசாரணை நடத்தினார். மரண விசாரணையை பருத்தித்துறை நீதவான் இம்மாதம் 21ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

பருத்தித்துறை சட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். மயிலேறும் பெருமாள் பிரேத பரிசோதனையை மேற்கொண்டார்.

இம்மரணம் தொடர்பாக கரவெட்டியைச்சேர்ந்த மூன்று இளைஞர்களையும், மற்றுமிரு இளைஞர்களையும் சந்தேகத்தின் பேரில் பருத்தித்துறை பொலிசார் தேடி வருகின்றனர். (வெ]

---

## இடம்பெயர்ந்த ஆசிரியர் பிரச்னை:

# நடவடிக்கை எடுப்பதாக பிரட்மன் உறுதி

(கொழும்பு)

இடம் பெயர்ந்த ஆசிரியர்களின் பிரச்னைகளை ஆழ்ந்த அனுதாபத்துடன் நோக்குவதாகவும், நடவடிக்கை எடுப்பதாகவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோன் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவிடம் உறுதியளித்துள்ளார்.

இ. த. ஆ. சங்கம் தம்மிடம் தெரிவித்த இந்த பிரச்னைகள் கவலையளிப்பதாகவும், சம்பந்தப்பட்டவர்களுடன்தொடர்பு கொண்டு ஆவன செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இ. த. ஆ. சங்கத் தலைவர் திரு. டி. எஸ். கே வணசிங்கா தலைமையில் சென்ற இத்தூதுக்குழு கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியது.

இத்தூதுக்குழுவில் பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம், நிர்வாகச்செயலாளர் திரு.எஸ். அருணகிரிராஜா, மஸ்கெலியா கிளைச்செயலாளர் திரு. எஸ். மனோகரன் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இடம் பெயர்ந்த ஆசிரியர்கள், பழைய இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கு இயலாமல் இருப்பதற்கு, இருப்பிட வசதியின்மையே முக்கிய காரணம் என தூதுக்குழு வலியுறுத்தியது. அது நியாயமான கோரிக்கை என திரு. பிரட்மன் வீரக்கோன் ஏற்றுக்கொண்டதாகவும் தூதுக்குழுவினர் தெரிவித்தனர். திரு. பிரட்மனுடன், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திரு எஸ். சிவானந்தனும் கூடஇருந்தார்.

அக்டோபர் மாதச் சம்பளம், இடமாற்றம், விசேட லீவு ஆசியன கிடைக்க ஆவன செய்வதாக திரு. பிரட்மன் உறுதியளித்தார். (மா)

---

## ஈச்சமோட்டை கொலை வழக்கு:

# எதிரிகள் இருவரும் பிணையில்செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை கொலை வழக்கில் எதிரிகள் இருவரும் தலா 2000 ரூபா பிணையில் செல்லஅனுமதிக்கப்பட்டனர்.

இவ்வழக்கு நேற்றுக்காலை யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகாராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 83 மார்ச் 24ல் ஈச்சமோட்டையில் செல்வரத்தினம் கபிரியலை, தெட்சணாமூர்த்தி ஜோசப், நிதத்வென கமகே ஆகியோர் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். தவராசாவும், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். விஸ்வநாதனும், சட்டத்தரணி எஸ் கனகசபாபதியின் அனுசரணையுடன் ஆஜரானார்கள். விசாரணை டிசம்பர் 12ம் தேதிக்கு ஒத்திப் போடப்பட்டது. (க)

---

## மணமுடித்து...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நீண்டகால நோயினாலும் வேலையில்லாத திண்டாட்டத்தினாலும் இறந்தவர் கவலையடைந்திருந்ததாக சாட்சியங்களின்போது தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது

---

## தபால், தந்தி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து தொண்ணூறு சதமாக அதிகரிக்கப்படுகிறது

வருடாந்த தொலைபேசிவாடகையைப் பொறுத்தவரை தனிப்பட்டவர்களது கட்டணம் ரூ 250லிருந்து 360 ரூபாவாகவும், வர்த்தகப் பாவனையாளர்களது கட்டணம் ரூபா 600லிருந்து 900 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

---

## கோண்டாவில் தாக்குதல் வழக்கு:

# எதிரிகளுக்கு வாரண்ட்!

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இராணுவ தாக்குதல் வழக்கில் எதிரிகள் இருவரும் நேற்று நீதிமன்றம் வராததினால், எதிரிகளுக்கு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

இவ்வழக்கு, யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில், 79-ம் ஆண்டு ஜூன் 2-ம் தேதி கோண்டாவிலில், ரயிலில் செல்கையில் இராணுவ வீரர்களான என். பி. சந்திரசிறி, ஆர்.பி. புஞ்சி பண்டா ஆகியோர், எம். பி. மொகதீனை தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணை 84 ஜனவரி 6-ம் தேதிக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது. (க)

---

# பலம்வாய்ந்த நட்பு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''2500 வருடகால சரித்திரத்தில் இன்று எழுந்துள்ள நிலையைச்சமாளித்து ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துவதானால் முதலில் பிரிவினைக்கு எதிராக சிங்கள மக்கள் அனைவரும் ஒற்றுமைப்படவேண்டியது முக்கியம்.''

### தொண்டமான் கருத்துப் பற்றி

''அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த சிங்கள அரசுந்தான் இன்று சிங்கள மக்கள் சமநிலையற்றவர்களாய் இருப்பதற்குக் காரணம் என்று திரு. தொண்டமான் கூறியிருக்கிறார். அவர் சொன்னது சரிதான். கட்சி அரசியல்தான் இதற்குக் காரணம். அதனால்தான் அவர் சட்டத்தைத் தம்கையில் எடுத்துக்கொண்டு அரசியல் சட்டத்தின் 14ம் பிரிவில் மறைத்துக்கொண்டு வவனியா, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் நாடற்ற இந்தியர்களைக் குடியமர்த்தி வருகிறார். இலங்கையிலுள்ள இந்திய நாடற்றவருக்கு இந்திய அரசாங்கத்திடம்வருடாந்தம் 1000 பேருக்கு 500 கோடி ரூபாய் என்ற வீதத்தில் தரும்படி இந்திய அரசாங்கத்திடம் கோரவேண்டும்.''

### சிங்கள மக்களுக்கு பாகுபாடு

''தேசிய சிறுபான்மையினருக்கு சட்டபூர்வமாக உரிமைகளை வழங்குவதை சிங்கள மக்கள் எதிர்க்கவில்லை.''

''இந்த நாட்டின் பெரும்மையினரான சிங்கள மக்களுக்குப் பாகுபாடு காட்டப்படுவதையே அவர்கள் எதிர்க்கிறார்கள். திரு. தொண்டமான் யாழ்ப்பாணத்திலுள்ள தீவிரவாதிகளான தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களோடும் தென் இந்திய தி. மு. க. பிரிவினைவாதிகளோடும் சேர்ந்துகொண்டு உலகம் முழுவதும் சென்று சிங்கள மக்களுக்கு எதிராக இயக்கம் நடத்திவருகிறார். இந்தமாதிரியான நடவடிக்கைகளை கைவிடும்படி அவரைச்செய்ய வேண்டும். இதே சமயம் யாழ்ப்பாணத்திலிருந்த சிங்களமக்கள் அனைவரும்வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

மாகாண ரீதியில் மாவட்ட சபைகளை ஒருங்கிணைத்து அதிக அதிகாரமுள்ள பிராந்தியசபைகளை அமைப்பதற்கான யோசனை கருத்திற்கொள்ள வேண்டிய ஒரு விடயம்.

### துறைமுகங்கள் விமானத்தளங்கள்

''திருகோணமலை துறைமுகம், விமானத்தளம், மற்றும் வடக்குகிழக்கிலுள்ள துறைமுகங்கள்யாவும மத்திய அரசின் பாதுகாப்புப்படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். கடற்கரைகளும், துறைமுகங்களும் மத்திய அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். இந்தியாவில் போன்று அவசியமான நிலைமைகள் ஏற்படும்போது இவை ஜனாதிபதியின்ஆட்சிக்கு உதவும்.

''வடக்குகிழக்கில் உள்ள சகல ஆலயங்களும், அகழ்வு ஆராய்ச்சிக்குரிய இடங்களும் மத்திய அரசின் கீழ் இருக்க வேண்டும். இந்தசபைகளால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் எதுவும் மத்திய அரசுக்குப் பிடிக்காதசமயம் அதனை ரத்துசெய்யும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கவேண்டும். மாவட்டசபைகளின் உள்ள பொலிஸ்படைகள் மத்திய அரசின் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயல்படவேண்டும்.

### பாதுகாப்பு ஏற்பாடுகள்

''கூட்டணித்தலைவர்களை பிரிவினையைக் கைவிடச்செய்யும் விதத்தில் இந்தியாவில் இப்போது பேச்சுக்கள் நடந்து வருகின்றன. நாட்டின் இறைமையைப் பாதுகாத்துக்கொள்ளும்வகையில்நவீன முறையில் நமது பாதுகாப்பு ஏற்பாடுகளை அபிவிருத்திச்செய்துகொள்வதற்கு பலம் வாய்ந்த நட்பு நாடொன்றுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டிய காலகட்டம் உருவாகியுள்ளது.'' என்றும் குறிப்பிட்டார்.

---

## 100 அகதிகள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் குடியிருப்பதற்கு வழங்கப்படும்.

கிளிநொச்சிப் பகுதி சமூக சேவை உத்தியோகத்தர் திரு. பொன். நித்தியானந்தன், நேற்று 100 அகதிகள் குடும்பங்களுக்கும் வீடுகளை வழங்கினார்.

இவ்வீடுகள், நிலப்பகுதி சிமெந்தினாலும். மற்றப்பகுதிகள் ஓலைகளினாலும் வேயப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (மா)

---

## 'சற்றர்டே றிவியூ'

1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படை மனித உரிமைகள் மீறல் ஷரத்தின் கீழ் மனுவை தாக்கல் செய்ய மேற்படி நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு உரிமை உண்டு என்று கோரும் மற்றுமொரு மனுமீது மூன்றிற்கு இரண்டு என்ற ரீதியில் நீதியரசர்கள் தீர்ப்பளித்திருந்தனர்.

நீதியரசர்கள் வனசுந்தராவும், ரத்வத்தையும் தொடர்பாக சாதமாகத்தீர்ப்பு வழங்கினர்.

நீதியரசர்கள் ஸோசா, வெற்றிக்கோ, பரிந்தா ரணசிங்கா ஆகியோர் இது தொடர்பாக பாதகமாகத் தீர்ப்பளித்தனர்.

பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபர், ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஆகியோர் இம்மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

மனுதார்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ் நடேசன் கியூ. ஸி., சட்டத்தரணி எஸ். மகேந்திரன் ஆகியோர் எஸ். எவ். எஸ். றிஸாவின் அனுசரணையுடன் ஆஜராகினர் அரசதரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனல் பிப்லி அசீஸ் ஆஜரானார்.

தீர்ப்பின் விபரம் எழுபத்து ஐந்து பக்கங்களில் உள்ளது. (வெ-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், ஸ்வேலோசிஸ் மேற்கு வீதி, 68-ம்இலக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under Number 8 100236/81. Eelanadu- P. O. Box 49, Telephone 22389 —24126.